முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 48 - தமிழ் இலக்கிய நயம்

## புள்ளியிடும் திட்டம்

Department of Examinations - Sri Lanka



இது, விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020
# 48 - தமிழ் இலக்கிய நயம்

## புள்ளி வழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| பகுதி I | 1 ஆம் வினா | 04x05 = 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா | 05x05 = 25 புள்ளிகள் |
| பகுதி II | 3ஆம் வினா | 05x05 = 25 புள்ளிகள் |

பகுதி III ( எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும்)

| | |
|---|---|
| 4ஆம் வினா 15 புள்ளிகள் | 15 x 02 = 30 புள்ளிகள் |
| 5ஆம் வினா 15 புள்ளிகள் | |
| 6ஆம் வினா 15 புள்ளிகள் | |
| 7ஆம் வினா 15 புள்ளிகள் | |

**மொத்தம் 100 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................................... ✓ △ 4/5
.....................................................................................
.....................................................................................

(ii) ..................................................................................... ✓ △ 3/5
.....................................................................................
.....................................................................................

(iii) ..................................................................................... ✓ △ 3/5
.....................................................................................
.....................................................................................

**மொத்தம்** ⟶ □ 10/15

Department of Examinations - Sri Lanka

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

VI. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka

## நோக்கங்கள்

1. பரீட்சார்த்தி இலக்கியங்களைக் கற்று, அவை குறித்த கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனை மதிப்பிடுதல்.

2. இலக்கியங்களைக் கற்று, அதன்வழி வெளிப்படும் பரீட்சார்த்தியின் மொழியாற்றலைக் கணிப்பிடல்.

3 பல்வேறுபட்ட படைப்புக்களை வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை மதிப்பிடல்.

4. பல்வேறுபட்ட படைப்புக்களை வாசித்து அவற்றை நயக்கும் ஆற்றலை மதிப்பிடல்.

Department of Examinations - Sri Lanka

# 48 - தமிழ் இலக்கிய நயம்

## பகுதி I

**1.** (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுஒச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி"

(அ) இங்கு சோழ மன்னன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான்?
(ஆ) 'கன்னி' என்று குறிப்பிடப்படுவது யாது?

(ii) "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ"

(அ) மேற்படி அடிகளின் பொருளைத் தெளிவாக எழுதுக.
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள அணியினை இனங்கண்டு விளக்குக.

(iii) "அன்புகாண் மரியா மக்த லேநா
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து"

(அ) மரியா மக்தலேநா எதுவாக உருவகிக்கப்படுகிறாள்?
(ஆ) உயிராக உருவகிக்கப்படுபவர் யார்?

(iv) "மனிதர்களுக்கு ஒரே ஒரு சிபி; ஒரே ஒரு சீதக்காதி. மரங்களில் எல்லாமே சிபிகள்; எல்லாமே சீதக்காதிகள்."

(அ) "மனிதர்களுக்கு ஒரே ஒரு சிபி; ஒரே ஒரு சீதக்காதி" என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?
(ஆ) "மரங்களில் எல்லாமே சிபிகள்; எல்லாமே சீதக்காதிகள்" என்று கூறுவதன் பொருத்தப்பாடு யாது?

(v) "எலிப்பொறியில் இருந்த கருவாட்டுத் துண்டை எறும்புகள் மொய்த்திருந்தன. எலிகள் எல்லாம் சைவத்தைத் தழுவிவிட்டனவா என எண்ணி அவன் எரிச்சலடைந்தான்."

(அ) அவன் எரிச்சலடைந்தமைக்கான காரணம் யாது?
(ஆ) இவ் விவரிப்பில், கதாசிரியரின் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் தொடர் யாது?

(4 × 5 = 20 புள்ளிகள்)

---

(i) (அ) – நிலையான புகழையும், வெண்கொற்றக் குடையையும் உடையவன்.
– என்றும் வளையாத செங்கோல் ஆட்சி செய்பவன்.
– கன்னியாகுமரியை வெற்றி கொண்டவன்.

(ஆ) கன்னியா குமரி / குமரி

(ii) (அ) கட்டித்தயிரைத் தன் காந்தட்பூ (இதழ்கள்) போன்ற மென்மையான விரல்களால் பிசைந்த வேளையில் நழுவிய உயர்ரக பட்டாடையின் பெறுமதியையும் பொருட்படுத்தாது கையைக் கழுவாதே, அதனைச் சரிசெய்து உடுத்து....

(ஆ) – உவமை அணி
– உவமானம் – காந்தள் மலர்
உவமேயம் – கைவிரல்கள்
பொதுத் தன்மை – தோற்றம் / மென்மை

Department of Examinations - Sri Lanka

(iii) (அ) மரிய மத்தலேநா – அன்பு

(ஆ) உயிர் – இயேசு

(iv) (அ) மனிதர்களில் வள்ளல்களாக ஒரு சிலரே இருக்கின்றமை

(ஆ) மரங்கள் யாவும் பயன் தருகின்றமை

(v) (அ) எலி எதுவும் பொறியில் அகப்படாமை

**அல்லது**

அவனது நோக்கம் நிறைவேறாமை

(ஆ) "எலிகள் எல்லாம் சைவத்தைத் தழுவி விட்டனவா"

(தொடரை விளக்கி எழுதியிருப்பினும் புள்ளிகள் வழங்குக.)

[ 4 x 5 = 20 புள்ளிகள் ]

Department of Examinations - Sri Lanka

**2.** கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அழகான ஒரு சோடிக் கண்கள் - அவை
அம்புகள் பாய்ச்சி என் உளமெலாம் புண்கள்

புவியியல் கற்றிடும் வேளை - அவை
புகையுள்ளே மின்னிச் சிரித்திடுங் காலை
தவித்துத் துடிப்பதென் வேலை - கல்வி
தங்குவதெங்கே மனம் ஒரு பாலை!

ஆட்சியியல் மறுபாடம் - உடல்
அங்கே தெரியும் மனம் எங்கோ ஓடும்
ஆட்சி செய்யுமுனைச்சாடும் - நான்
ஆழிச்சுழியில் மிதந்திடும் ஓடம்!

தாய்மொழிப் பாடம் நடக்கும் - நறை
தாங்கிய கண்களோ பின்னலடிக்கும்
ஏய்! என்று என்னைப் பிடிக்கும் - மனம்
எப்படிக் கண்ணே பாடம் படிக்கும்...?

தத்துவப் பாடம் நடக்கும், அவை
தத்தித் திமிக்கி இமைகள் மடிக்கும்!
வித்தையில் பித்துப்பிடிக்கும் - நம்
வீட்டாரறிந்தால் கன்னந்தடிக்கும்!

(i) இப்பாடல், எவற்றைப் பற்றி விவரிக்கின்றது? அவை பற்றிய எண்ணம் கவிஞருக்கு ஏற்படும் இடம் யாது?

(ii) இங்கு, கவிஞராற் குறிப்பிடப்படும் பாடங்கள் யாவை?

(iii) கவிஞர், தன்னையும் தன் மனத்தையும் எவ்வெவ்வாறு உருவகிக்கின்றார்? அவ்வுருவகங்களின் பொருத்தப்பாடு யாது?

(iv) 'நம் வீட்டாரறிந்தால் கன்னந்தடிக்கும்' என்பதன்மூலம் உணர்த்தப்படுவது யாது?

(v) பின்வரும் தொடர்களில் நீர் காணும் நயத்தினை விவரிக்குக.

- நறை தாங்கிய கண்கள்
- தத்தித் திமிக்கி இமைகள் மடிக்கும்

(5 × 5 = 25 புள்ளிகள்)

(i) – காதலியின் கண்கள் பற்றி

– வகுப்பறை

(ii) – புவியியல், ஆட்சியியல், தாய்மொழி, தத்துவம்

(iii) – தன்னை ஆழிச் சுழியில் மிதந்திடும் ஓடமாக

மனதை ஒரு பாலையாக

– சமுத்திரச் சுழியில் அகப்பட்ட ஓர் ஓடம் எவ்வாறு நிலையின்றிச் சுழலுமோ அதுபோல காதல் எனும் சுழியில் அகப்பட்டுச் சுழல்கின்றமை.

பாலை நிலத்தில் நீர் ஊற்றினால் அது தங்காது; அதுபோல படிக்கும் பாடம் எதுவும் தங்காமை

(iv) – படிக்கின்ற காலத்தில் காதலிப்பதை வீட்டார் அறிந்தால் தண்டிப்பர்.

(v) – அவளுடைய பார்வையானது அவனுக்கு இனிமையான உணர்வினைத் தருகின்றமை, நறை (தேன்) தாங்கிய கண்கள் என்பதன் மூலம் உணர்த்தப்படுதல்.

– அவளுடைய கண்ணிமைகளின் அசைவு அவனுக்கு நடனமாகப் புலப்படுவதை, "தத்தித்திமிக்கி" என்ற நடன ஜதிமூலம் வெளிப்படுத்தல்.

[ 5 x 5 = 25 புள்ளிகள் ]

Department of Examinations - Sri Lanka

## பகுதி II

**3. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஒரு திருப்தியான முடிவுக்கு வந்தவனாக எழுந்து நிற்கிறேன். இந்த ரியால் நோட்டுக்காக வழக்காடி நிருபிப்பதற்கு எந்த ஆவணமும் கிடையாது. நோட்டையும் கடிதத்தையும் பெட்டியில் வைத்து இறுக மூடிவிடுகிறேன். கூடவே மனச்சாட்சியையும்தான். கலியாண வீட்டுக்குக் குடும்ப சகிதம் போகலாம் என்ற இறுதி நிர்ணயமும், என்னளவில் செய்தாகிவிட்டது. பிறகென்ன?

இப்போது தூறல்களின் பலம் தணிந்திருந்தது. சைக்கிளைத் தள்ளிக் கொண்டே பாதையில் நடக்கிறேன். வழியில், வழக்கமான கேள்விகள் என்னை வரவேற்கின்றன. இதென்ன? என்னை எதிர்பார்த்தபடி கிழவி பாதையருகில் வந்து நிற்கிறாளே?

"ஏண்ட பேரனுங்க, நெருப்பு மாதிரிக் காயுது! டொக்டர் கிட்ட போவ எண்டாலும் எனக்கிட்ட ஐஞ்சி சதமாலும் இல்ல. ய அல்லாஹ் நான் என்னத்தச் செய்ய மகன். கல்பு கேட்குது இல்ல. இண்டக்கி எண்டாலும் மகள்ட கடிதம் என்னத்தையும் ஈக்கியா?

அழுகையும், ஆத்திரமும் தொண்டையை அடைக்கிறது அவளுக்கு. பாம்பை மிதித்துவிட்ட பயம் கலக்கம் எனக்கு. 'கடிதம் இல்ல ஆச்சி நான் வாரேன் நேரம் பெயித்திட்டுது!'

ஒரு மாபெரும் சங்கடத்திலிருந்து மீண்ட உணர்வில் உற்சாகம் வரவழைத்து வேகமாக மிதிக்கிறேன். கிழவியும் பாத்தும்மாவும் மனக்கண்ணில் நிர்தாட்சண்யமாய் நிழலாடினர். இருவரில் யாருடைய முகத்தில் பூரிப்பின் முத்திரையைப் பதிப்பது என்பதில் உள்மனம் அவலப்பட்டுக் கொண்டது.

(i) கதைசொல்லியின் குறித்த சூழ்நிலையிலான மனநிலையைச் சுருக்கமான முறையில் உணர்த்துவதற்கு 'கூடவே மனச்சாட்சியையும்தான்' என்ற தொடர் எவ்வாறு உதவுகின்றது?

(ii) மனதை உறுத்திக் கொண்டிருந்த பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து ஓரளவில் விடுபட்ட கதைசொல்லியின் மனநிலைக்கும் அச் சூழ்நிலையில் பெய்த மழை பற்றிய 'இப்போது தூறல்களின் பலம் தணிந்திருந்தது' என்ற விவரிப்புக்கும் இடையில் காணத்தக்க இயைபு யாது?

(iii) பிரச்சினையிலிருந்து விடுபட்டுவிட்ட திருப்தியோடு சென்றுகொண்டிருந்த கதைசொல்லி, எதிர்பட்ட கிழவியைக் கண்டதும் தான் உற்ற கலக்கத்தை வெளிப்படுத்தும் பாங்கில், நீர் காணும் நயத்தினை விளக்குக.

(iv) 'கிழவியும் பாத்தும்மாவும் மனக்கண்ணில் நிர்தாட்சண்யமாய் நிழலாடினர்.' - இக்கூற்றை விளக்குக.

(v) 'ஒரு மாபெரும் சங்கடத்திலிருந்து மீண்ட உணர்வில் உற்சாகம் வரவழைத்து வேகமாக மிதிக்கிறேன்' இங்கு 'உற்சாகம் வரவழைத்து' என்ற அடைமொழியால் உணரக்கூடியது யாது?

(5 × 5 = 25 புள்ளிகள்)

(i) குடும்பத்தின் இக்கட்டான பொருளாதார நிலையில், தவறான ஒரு காரியத்தைச் செய்வதன்மூலம் அதிலிருந்து விடுபட முயன்றபோது, அவனது மனச்சாட்சி உறுத்தியது. தவிர்க்க முடியாத நிலையில் அத் தவறைச் செய்வதற்கு அவன் தீர்மானிக்கிறான் என்பதை "நோட்டையும் கடிதத்தையும் பெட்டியில் வைத்து இறுக மூடிவிடுகிறேன்" என்ற அவனது கூற்றைத் தொடர்ந்து வரும் "கூடவே மனட்சாட்சியையும்தான்" என்ற கூற்று உணர்த்துகிறது.

(ii) தொடர்ந்து சிரமப்படுத்திய மழைத்தூறல் இப்போதுதான் சற்றுத் தணிந்தது. அது பற்றிய விபரிப்பு, அவனைத் தொடர்ந்து வருத்திய பொருளாதாரப் பிரச்சினைக்கு ஏதோ ஒரு வழியில் தற்காலிக தீர்வு ஒன்றைக் கண்டமையோடு இயைபுபடுகிறது.

Department of Examinations - Sri Lanka

(iii) கிழவியின் பணத்தைத் திருட்டுத்தனமாக எடுத்த குற்ற உணர்வோடு சென்று கொண்டிருந்தவன், பணத்தை எதிர்பார்த்து எதிர்பட்ட அக் கிழவியைக் கண்டதும் துணுக்குறுகிறான். எதிர்பாராத நிலையில் பாம்பை மிதித்தவன் எய்தும் துணுக்கம் / அச்சம் அவனுடைய கலக்கத்தை உணர்த்தப் பொருத்தமாய் அமைகிறது.

( iv) பணத்துக்கு உரியவளான கிழவி; பணத்தை எதிர்பார்த்திருக்கும் மனைவி பாத்துமா. அவர்கள் இருவரையும் அவன் சமமாகவே நோக்குகிறான். அதாவது, இவர்களில் எவர்மீதும் விசேட இரக்கம் காட்டாது நியாயம் பற்றியே சிந்திக்கிறான்.

(v) கிழவியிடம் இருந்து தப்பி விடுபட்டமை அவனுக்குத் தற்காலிக நிம்மதியைத் தருகிறது. ஆயினும், அவனுடைய மனச்சாட்சி உறுத்துகிறது. அதனால் அவனுக்கு உற்சாகம் இயல்பாக எழவில்லை. அதைச் செயற்கையாக வரவழைக்கப் பார்க்கிறான்.

[ 5 x 5 = 25 புள்ளிகள் ]

Department of Examinations - Sri Lanka

## பகுதி III

- எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

**4.** 'புத்தகசாலை' என்ற கவிதையில்,

(i) புத்தகங்களதும் புத்தகசாலைகளதும் சிறப்பு

(ii) புத்தகசாலைகள் ஆற்றவேண்டிய பணிகள்

என்பன தொடர்பாக, கவிஞர் பாரதிதாசன் முன்வைக்கும் கருத்துக்களைத் தெளிவுறுத்துக.

(i) • **புத்தகங்களின் சிறப்பு**

- புத்தகங்கள், வாசிப்பவனுக்கு மனம் ஒன்றிய இனிய அனுபவங்களைத் தருதல் (இனித்த புவி இயற்கை எழில், இசை, நறுமணம், சுவைகள்)
- மனிதர்களுக்குள் மிகவும் உயர்ந்தவர்களான கவிஞர்களது நெஞ்சிலே உதித்த அறிவொளியில் கலக்கச் செய்தல்
- புத்துணர்வு தருதல்

இவ்வாறான மிகப் பெரும் உதவிகளைத் தருதல்.

• **புத்தகசாலைகளது சிறப்பு**

- மனிதர் யாவரும் அன்புநெறி காண்பதற்கும்
  விரிந்த மனப்பாங்கினைப் பெறுவதற்கும்
  சுயநலப் போக்கினைத் தவிர்த்து பொது நோக்கில் சிந்திப்பதற்கும் ஏற்ற இனிய உயர்வான சிந்தனைகளைக் கொண்ட புத்தகங்களைக் கொண்டு விளங்குதல்.
- மக்கள் புனிதமுறுவதற்கும் புதுவாழ்வு பெறுவதற்கும் ஏற்ற புத்தகங்களைக் கொண்டிருத்தல்.

(ii) • **புத்தகசாலைகள் ஆற்ற வேண்டிய பணிகள்**

- பிறமொழியில் உள்ள நூல்கள் அனைத்தையும் தமிழ்மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து தருதல்.
- தமிழ்மொழியில் உள்ள கவிதை நூல்களோடு உரைநடை நூல்களையும் கொண்டிருத்தல்.
- பல்கலை சார்ந்த நூல்களைச் சேகரித்து வாசகர்களுக்கு ஏற்ற வகையில் துறை ரீதியாகப் பிரித்து அடுக்கி வைத்திருத்தல்.
- பலவகைப்பட்ட பத்திரிகைகளைக் கொண்டிருத்தல்.

[ 8 + 7 = 15 புள்ளிகள் ]

**5.** கம்பராமாயணம் கிட்கிந்தைப் படலத்தின் அடிப்படையில் பின்வருவனவற்றை விளக்குக.

(i) இலக்குமணனின் நடத்தைகளூடாகப் புலனாகும் அவனது பண்பு நலம்

(ii) இராமனது கூற்றினூடாகப் புலனாகும் சுக்கிரீவனது இயல்புகள்

(i)
- அண்ணனின் சொற்படி நடக்கின்றமை
- சுக்கிரீவனின் குற்றங் கேள்வியுற்று அறச் சீற்றங் கொள்கின்றமை
- பெண்களைப் பார்க்க அஞ்சுகின்ற ஒழுக்கமுடைமை
- தக்க உரை கேட்டு, கோபம் நீங்கி, அருள் பிறக்கின்றமை
- விதவைக் கோலத்தில் இருக்கும் தாரையைப் பார்த்து, தன் தாயரை எண்ணி மனம் இரங்குகின்றமை.

(ii)
- பெறற்கரிய செல்வத்தைப் பெற்றபின் அதைப் பெறுவதற்கு உதவியவர்களை மறந்தவன் (நன்றி மறத்தல்).
- ஒழுக்கம் கெட்டவன் (சீர்மையும் தீர்ந்தனன்)
- அறத்தைப் பொருட்படுத்தாதவன்.
- புதிய வாழ்வில் மயங்கி அந்த வாழ்வைப் பெறுவதற்குத் துணை நின்றவர்களின் உதவியை மாத்திரம் அன்றி, அவர்களது ஆற்றலையும் மறந்த அறிவீனன்.
- நட்பைப் பொருட்படுத்தாதவன்.
- வாய்மை அற்றவன்.

[ 7 + 8 = 15 புள்ளிகள் ]

Department of Examinations - Sri Lanka

**6.** ‘தாய்ப்பசு’ சிறுகதையில்,

(i) காளை மாட்டின் வன்ம உணர்வு

(ii) பசு மாட்டின் இரக்க உணர்வு

என்பன விவரிக்கப்படுமாற்றை விளக்குக.

(i)

- கன்றுக்குட்டியைப் பால் குடிக்க விடாது மாடசாமி தடுத்ததால், மிக்க கோபம் அடைந்தமை.
- கன்றுக்குட்டியைப் பால் குடிக்க விடாது அதனைச் சாகடித்ததால், பழிக்குப்பழி தீர்க்க முனைதல்.
- மாடசாமியின் மகனான குமரனைக் கொல்வதற்காக கோபத்துடன் செயற்பட்டமை.
- “கொலைக்குக் கொலை, பழிக்குப் பழி” என்று ஆவேசமாகக் குமுறியமை.
- “.... உனக்கு ஏன் இவ்வளவு வெறி வந்து விட்டது?” என்ற தாய்ப் பசுவின் கதறல்மூலம் காளையின் வன்ம உணர்வு வெளிப்படுகின்றமை.

(ii)

- தனது கன்றைப் போலவே, எஜமானின் மகனையும் அன்போடு நாக்கால் தடவுதல்.
- கன்றுக்குட்டி பாலில்லாது துடிப்பதைப் பார்த்து, வேதனை தாங்காது தவித்தல்.
- வைக்கோல் அடைத்த பொம்மைக் கன்றுக்குட்டியைப் பார்த்ததும், அதைத் தன் கன்று என நினைத்து மடியில் தானாகவே பால் சுரத்தல், கண்ணீர் விடுதல், கதறுதல்.
- தன் கன்றை நினைத்துக் கண்ணீர் வடித்து உணவை ஒறுத்தல்.
- காளைமாடு குமரனைத் தாக்க முயன்றபோது, கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிப்போய் குமரனுக்கும் காளை மாட்டிற்கும் இடையில் நிற்றல்.
- குமரனைத் தாக்க முயன்றமைக்காக காளை மாட்டின்மீது ஆத்திரம் கொள்ளுதல்.

[ 7 + 8 = 15 புள்ளிகள் ]

Department of Examinations - Sri Lanka

**7.** 'உரிமையும் கடமையும்' என்ற கட்டுரையின் அடிப்படையில் பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.

(i) உரிமைக்கும் கடமைக்கும் இடையிலான முரண்பாடு பற்றி, கட்டுரையாசிரியர் எவ்வாறு விவரிக்கின்றார்?

(ii) அன்பு, அந்த முரண்பாட்டை நீக்கவல்லது என்பதை அவர் எவ்வாறு நிறுவுகின்றார்?

(i)

- உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால் குழப்பம் மிஞ்சும், அத்துடன் உரிமையும் நிலைக்காது.
- பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள், கடமையில் கருத்துச் செலுத்துவது குறைவு.
- எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப்பற்றி மிகுதியாக நினைத்துக் கடமையைப் புறக்கணிக்கிறார்களோ, அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்.
- குடும்பத்தில் தாயின் அன்பைத் தவறாகப் புரிந்து கொண்டு குடும்ப அங்கத்தவர்கள் நடக்கும்போது உரிமைப்போர் ஏற்படும்
- உரிமையைப் பற்றி எண்ணும் அளவிற்கு கடமையைப் பற்றியும் எண்ண வேண்டும்; இல்லையேல் குடும்பப் போராட்டம், நாட்டுக் கலகம், உலகப் போர் ஏற்படுவததைத் தவிர்க்க முடியாது.
- கடமையைச் செய்யத் தவறுபவர்களுக்கு உரிமை கிடையாது, உரிமையை மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால் உள்ள உரிமையும் இல்லாமற் போய்விடும்.

(ii)

- உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு.
- உரிமையையும் கடமையையும் பலப்படுத்தும் பாலம் அன்பு.
- அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ அங்கே உரிமைப் போராட்டம் இல்லை.
- குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்யும்போது சுற்றந்தழுவி, இன்புற வாழலாம்.
- தேசபக்தி எனும் அன்பு நாடு எனும் பரந்த குடும்பத்தைப் பாதுகாக்கும்.
- சமயமாகிய அன்பு நெறி, கடவுளின் குடும்பமே உலகமெனும் பரந்த நோக்கை வளர்க்கும்.

[ 8 + 7 = 15 புள்ளிகள் ]

☆☆☆

Department of Examinations - Sri Lanka